சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான திரு.M.பழனி என்பவரின் வாரிசுதாரர் மகள் திருமதி.P.மகாலெட்சுமி என்பவர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் 28(2) ஆகியவற்றை தளர்த்தி பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (3ப) எண். 05

நாள்: 23.02.2021
சார்வரி, மாசி 11,
திருவள்ளுவர் ஆண்டு–2052

படிக்கப்பட்டவை:

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் எண்.தா4/9033/2018, நாள்:28.02.2019.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.9330/2020/டி2, நாள்:10.07.2020.

* * * * *

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 20.12.2017 அன்று பணியிடைக்காலமான திரு.M.பழனி என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான திருமதி.P.மகாலெட்சுமி என்பவருக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரால் பணி நியமனம் வழங்கப்பட்டு 06.03.2019 முற்பகல் முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார். அன்னாரின் பணியினை பணி வரன்முறை செய்யக் கோரி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண்பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் திருமதி.P.மகாலெட்சுமி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 12.10.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 08.12.1988 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 29 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 29 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 30 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை. எனவே, தனியரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள்:01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 20.12.2017 அன்று பணியிடைக்காலமான திரு.M.பழனி என்பவரின் வாரிசுதாரரான திருமணமான மகள் திருமதி.P.மகாலெட்சுமி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 06.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் நிலையில் அவரது பணியினை வரன்முறை செய்ய ஏதுவாக திருமணமான மகள் என்பதாலும், பணப்பலன்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பெறும்பொருட்டும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றை தனியர் பொருட்டு தளர்வு செய்து தனியரது பணியை 06.03.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 10.02.2021 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண்.1895/ட்டி.1/2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.4477/ஜி1/2021, நாள்:17.02.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹன்ஸ் ராஜ் வர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல கணக்குத் துறை இயக்குநர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**நகல்:**
திருமதி.P.மகாலெட்சுமி, இளநிலை உதவியாளர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

ந.க. எண்.தா4/ 9033/ 2018
நாள்.17 .03.2021

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி),
திருச்சிராப்பள்ளி.

அரசாணை (3ப) எண்.05, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3)த்துறை நாள்.23.02.2021.–ன் நகல் சார்வு செய்யப்படுகிறது.

17/03/2021

மாவட்ட ஆட்சியருக்காக,
திருச்சிராப்பள்ளி.

17/3/21

பெறுநர் : திருமதி.ப.மகாலெட்சுமி,
ஊர்நல அலுவலர் நிலை –2,
ஊராட்சி ஒன்றியம்,
புள்ளம்பாடி.

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ),
ஊராட்சி ஒன்றியம், புள்ளம்பாடி மற்றும் வையம்பட்டி.

நகல் : தா 3 – பிரிவிற்கு.

நகல் : தா 4 – இருப்புக் கோப்பிற்கு.

Received copy

19/03/2021